
# காரைக்கால் அம்மையார் புராணம்

சோழ நாட்டின் கடற்கரையில் கடற் சங்குகளால் வளமை பெற்றது காரைக்கால் நகரம்.
அங்கு நல்ல நெறியில் வாழும் வணிகக் குலத்தின் தலைவராகத் தனதத்தன் என்பவர் விளங்கி வந்தார்.
அவருக்கு அழகிய பெண் குழந்தையொன்று பிறந்தது.





பெற்றோர்கள்
புனிதவதியை மிகவும் சீரும் சிறப்புமாக வளர்த்தார்கள். புனிதவதியும் அழகுக் கொழுந்தாகத் திகழ்ந்தார். தன் சக தோழியருடன் விளையாடும் போதும் சிவனைப் பற்றியே பேசுவார். இறைவன் சிவனார் மீது அப்படி ஒரு ஈடுபாடு.

புனிதவதி மிக்க வனப்புடைவளாக வளர்ந்து திருமணப் பருவத்தை அடைந்தார்.



நாகப்பட்டினத்தை சேர்ந்த செல்வந்தர் நிதிபதி தன் மகன் பரமத்தத்தனுக்கு புனிதவதியாரைப் பெண் கேட்டு, சில மூத்த அறிஞர்களைக் காரைக்காலுக்கு அனுப்பி வைத்தார்.



தனத்தத்தனின் மாளிகைகையில் மிகச் சிறப்பாகப் புனிதவதி பரமதத்தன் இருவருக்கும் திருமணம் நடந்தேறியது.




தனதத்தனுக்குப் புனிதவதி ஒரே மகளாகையால் தன் வீட்டருகிலேயே ஒரு மாளிகை கட்டி அவர்களைக் குடியமர்த்தினார். பரமத்தத்தன் தன் வியாபாரத்தை வளர்த்து வந்தான். புனிதவதியார் தன் வீட்டுக்கு வரும் சிவனடியார்களுக்கு உணவளிப்பதை ஒரு இறைப் பணியாகச் செய்து வந்தார்.





இவ்வாறு இருக்கையில், ஒரு நாள் பரமத்தத்தனின் வியாபாரத் தலத்திற்கு வந்த சிலர் அவனுக்கு இரண்டு மாங்கனிகளைக் கொடுத்தார்கள்.




பரமத்தத்தன் அவ்விரண்டு மாங்கனிகளையும் வேலையாள் மூலம் வீட்டிற்கு கொடுத்து அனுப்பினான்.





புனிதவதி அவ்விரண்டு கனிகளையும் வாங்கி வீட்டினுள் வைத்தார். இந்த நேரத்தில் சிவனடியார் ஒருவர் பசியால் உணவு உண்பதற்காகப் புனிதவதியின் வீட்டிற்கு வந்தார்.
வாருங்கள் ஐயா! அமருங்கள்.
மெத்த மகிழ்ச்சி அம்மா! மிகவும் பசிக்கிறது!



அப்பொழுது சோறு மட்டுமே சமைக்கப்பட்டுள்ளது காய்கறிகள் ஏதும் சமைக்கப்பட நேரம் அமையவில்லை.
கணவர் அனுப்பிய இரண்டு மாங்கனிகளில் ஒன்றைக் கொடுத்து அமுதுடன் உண்ணச் செய்யலாம் .


ஒரு மாங்கனியைக் கொடுக்கிறாள்.
ஐயா! பசியார உண்ணுங்கள்.
அருமையான அமுதுண்டேன், மாங்கனியின் சுவையும் அற்புதம். நீர் நீடூழி வாழ்க!


பரமதத்தன் நண்பகலில் வீட்டிற்கு வந்து உணவு உண்பதற்காக அமர்கிறான்.
மாங்கனியின் சுவை அற்புதம். எங்கே, நான் கொடுத்த அனுப்பிய இன்னொரு கனியையும் கொண்டு வா!
இதோ, நீங்கள் கொடுத்து அனுப்பிய மாங்கனியையும் சேர்த்து உண்ணுங்கள்.


திகைத்துப் போன புனிதவதி அங்கிருந்து நீங்கி உள்ளே வந்தார்.


புனிதவதியார் இறைவனைத் தியானித்தார்.
உற்றவிடத்து உதவும் பெருமானே! இன்னொரு கனிக்கு நான் என்ன செய்வது? எனக்கு உதவுங்கள் பெருமானே!


அவர் கையில் அதிமதுரமான மாங்கனி ஒன்று வந்து அமர்ந்தது..
ஆ! என்ன அற்புதம்! இப்பொழுது இதை என் கணவருக்குக் கொடுக்கிறேன்.


புனிதவதியார் மாங்கனியை பரமத்தத்தனின் இலையில் வைக்கிறார். பரமதத்தன் அதை உண்கிறார்.
ஆகா! அற்புதமான சுவை! நான் முன்பு உண்ட அக்கனியைப்போல் இல்லை. இக்கனியை நீ எங்கிருந்து பெற்றாய்?


சுவாமி! தாங்கள் கொடுத்த அக்கனிகளுள் ஒன்றை பசியோடு வந்த ஒரு அடியாருக்கு அமுதாகப் படைத்து விட்டேன். நீங்கள் இன்னொன்றையும் கேட்டவுடன் என்ன செய்வதென்று தெரியவில்லை. இறைவனை வேண்டினேன், அவர் இக்கனியை அருளினார்.


என்ன இது! எம்பிரான் திருவருளால் பெற்ற கனியா? அப்படியானால் இன்னொரு கனியை என் கண் முன்னர், இப்பொழுதே வரவழைத்துக் கொடு பார்ப்போம்.


எம்பெருமானே! நான் என்ன செய்வேன்? இங்கு இன்னொரு கனியை நீர் தரவில்லை எனில் என் வாக்கு பொய்யாகிவிடும்.
அப்போது இறைவனின் அருளால் அவர் கையில் இன்னொரு மாங்கனி வந்து சேர்ந்தது.


புனிதவதியார் அதைக் கொண்டு வந்து தமது கணவர் கையில் கொடுத்தார்.


பரமதத்தன் கையில் மாங்கனியைப் பெற்றதுமே அக்கனி மறைந்து காணாமல் போயிற்று.
!!!!



பழம் வந்து பின்னர் மறைத்ததைப் பார்த்துத் திகைத்துப் போனான் பரமத்தத்தன்.



ஆ! இவள் சாதாரண பெண் அல்லள்; இவள் பெண் தெய்வம். இவளோடு இல்லறம் இனிமேலும் நடத்துவது இயலாது இவளை விட்டு நாம் நீங்கி விட வேண்டும்.


புனிதவதியாரை விட்டு நீங்குவதே நோக்கமாகக் கொண்டிருந்தான் பரமதத்தன்.
நான் கடல்மேல் கப்பலில் சென்று வாணிபம் செய்து நிறைய செல்வம் கொண்டு வருவேன்; ஆகவே நான் புறப்படுகிறேன்.
நலமுடன் போய் வாருங்கள்.

உறவினர்கள் மற்ற வணிகர்கள் எல்லோரும் அவனுக்கு ஒரு மரக்கலம் மற்றும் பொருட்களை ஏற்பாடு செய்தனர். அவனும் ஒரு நல்ல நாளில் புறப்பட்டான்.






பல நாள் வாணிபம் செய்த பரமதத்தன் மிகுந்த செல்வத்தைத் தேடிப் பெற்று குபேரன் போல, செந்தமிழ் நாட்டில் ஒரு கடற்கரை பட்டினத்தில் வாழ்ந்து வந்தான்.
அங்கு பிரபலமான ஒரு வணிகனின் மகளைத் திருமணம் செய்து கொண்டான்.


புது மனைவியோடு மிகுந்த மகிழ்ச்சியாய் வாழ்ந்து வந்தான். ஒரு பெண் குழந்தையும் பிறந்தது.
நமது முந்தைய வாழ்க்கை பற்றி இந்த மனைவிக்கு எதுவும் சொல்ல வேண்டாம். இருப்பினும் நம்மால் கைவிடப்பட்ட அந்த பெண் தெய்வத்தின் பெயரையே இக்குழந்தைக்குச் சூட்டுவோம்.



குழந்தாய் புனிதவதி!
புனிதவதி!
இந்நிலையில் அங்கே காரைக்காலில் புனிதவதியார் கற்பின் நெறியோடு காத்திருக்கிறார். உறவினர்கள் சிலர் உரையாடுகின்றனர்...


பரமதத்தன் பெருஞ்செல்வத்தோடு பாண்டிய நாட்டில் குடியிருக்கிறான் என்று கேள்விப்பட்டோம்.
அப்படியானால் இவரையும் அங்கு கொண்டுச் சேர்ப்பது தான் நல்லது.


புனிதவதியின் சுற்றத்தார்கள் பெண்கள் எல்லாரும் ஆக புனிதவதியை ஒரு சிவிகையில் வைத்துத் பல நாட்கள் பயணம் செய்து பாண்டிய நாட்டில் அவன் வசித்து வரும் நகரத்தை அடைகிறார்கள்.


அவர்களிடமிருந்து தகவல் வந்ததும் பரமதத்தன் சிந்தையில் பயம் கொண்டான்.
இனி என்ன செய்வது? மனைவி குழந்தையோடு முன்னதாகவேச் சென்று புனிதவதியாரை வணங்க வேண்டியது தான்.



தன் இரண்டாவது மனைவி மற்றும் குழந்தையோடு சென்று புனிதவதியாரின் காலில் விழுந்து வணங்குகிறான்.
பரமத்தத்தா! என்ன இது! ஏன் உன் மனைவி காலில் விழுந்து வணங்குகிறாய்?


ஐயன்மீர்! இவர் மானிடப்பிறவி அல்லர்; இவர் நற்பெருந் தெய்வமாவார். இவரது பெயரையே என் பெண் குழந்தைக்கு சூட்டியுள்ளேன்!



உடனே புனிதவதியார் சிவபெருமானை துதித்து...
ஈசனே என் கணவர் குறித்த கொள்கையிது, அவருக்காகவே தாங்கி வந்த இந்த வனப்பு வேண்டாம். பூதகணங்களைப் போல எனக்கும் பேய் வடிவம் தர வேண்டும் ஐயனே!


அம்பலவாணனின் திருவருளால், சதை வனப்பு அகன்று, வெறும் எலும்புக் கூடாய் அனைவரும் வணங்கத்தக்கப் பேய் வடிவமாய் நின்றார். பூதகணங்கள், தேவர்கள் மலர் மாரி பொழிந்தனர்.






உறவினர் மற்றவர்கள் அகன்ற பின்...
பூதகணங்களில் நானும் ஒன்றானேன். ஐயா எம்பெருமானே, உம் அருள் இது!
சிவனை உள்ளுருகி அற்புதத் திருவந்தாதியும் இரட்டை மணிமாலையும் பாடி அருளினார்.


காரைக்காலம்மையாருக்கு சிவன்பாலுள்ள பேருணர்வு மென்மேலும் ஓங்கியது.
என் ஈசன் என்னை அறிவாராகில் அதுவே எனக்குப் போதும் இப்போதே கயிலைச் சென்று என் அப்பனைக் காண வேண்டும்.!


பல நாடு நகரங்களைக் கடந்து கயிலையை நெருங்கினார்.
இனி கயிலையைக் காலால் மிதிக்க மாட்டேன், தலையாலே தான் நடந்து செல்வேன்.


கயிலையில் பார்வதி சிவபெருமானிடம்..
எம்பெருமானே! இங்கு தலையால் நடந்து வரும் அந்த என்பு உருவின் பக்தி தான் என்னே!


உமையே! அது நம்மைப் பேணும் அம்மையே காண். அவர் நம்மை வேண்டிப் பெற்ற அன்பு வடிவம் இது!


கயிலையில்...
அம்மையே
அப்பா


அம்மையே இங்கு நீ வேண்டுவது யாது?!.
ஐயனே! பிறவாமை வேண்டும் . மீண்டும் பிறந்தால் உன்னை என்றும் மறவாமை வேண்டும். நீ ஆடும் போது உன்னடியின் கீழ் நான் இருந்து பாடவேண்டும்.
அம்மையே! தென்திசையில் திருவாலங்காடு வந்து நான் ஆடும்போது என் அடியின் கீழ் எப்போதும் இருந்து என்னைப் பாடுவாயாக!.

திருச்சிற்றம்பலம்.